DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.15/2024**

Deposition of witness for Prosecution அ.சா.1

Name : ராஜேஸ்வரி
Father/ Husband Name : மணி
Village :
Taluk :
Calling :
Age :

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 02.07.2025.

**முதல்விசாரணையின் தொடர்ச்சி:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. கடந்த 25.11.2023-ம் தேதி மாலை 05.30 மணியளவில் ஆனந்தா கல்லூரி பின்புறம் நான் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தேன். அப்போது மழை பெய்தது. நான் கட்டிடத்தின் மறைவில் நின்றேன். அப்போது சேவியர் மகன் ஸ்டீபன் நான் நிற்பதை கவனிக்காமல் 2 ஆட்டுக்குட்டிகளை கையில் தூக்கிக் கொண்டு ஓடினார். நான் திருடன் திருடன் என்று கத்திக் கொண்டு ஓடினேன். பக்கத்தில் உள்ளவர்கள் எல்லாம் ஓடி வந்தார்கள். ஸ்டீபனை எனக்கு முன்பே தெரியும். அவர் என் வீடு இருக்கும் பகுதியை சேர்ந்தவர் தான். ஸ்டீபன் ஆடுகளை விட்டுவிட்டு பக்கத்து வீட்டு காம்பவுண்ட் சுவரில் ஏறி ஓடிவிட்டார்.

2. அதன் பிறகு அருள் மகன் ஸ்டீபன் வந்து என்னுடைய 2 ஆட்டுக்குட்டிகளை தூக்கி தலைகீழாக அடித்தார். நான் என் ஆட்டுக்குட்டியை கொல்கிறார்களே என்று போய் மறித்தேன். அப்போது அருள் மகன் ஸ்டீபன் ஆட்டை விட்டுவிட்டு என்னை மடக்கி பிடித்து முதுகில் குத்திவிட்டார். நான் போய் பக்கத்தில் உள்ள வீட்டுக்காரர் அண்ணன் அருகில் போய் பதுங்கினேன். அதன் பிறகு எனக்கு மூச்சுத்திணறல் போல் ஏற்பட்டு மயங்கினேன்.

3. பிறகு சேவியர் மகன் ஸ்டீபனும் பக்கத்து வீட்டுக்கார அண்ணனும் அருள் மகன் ஸ்டீபனை அடிக்கவிடாமல் தடுத்து அழைத்து

சென்றார்கள். நான் தேவகோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. போலீஸ் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் இரவு 06.30-7.00 மணியளவில் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். போலீசார் என்னை விசாரிக்கும்போது நான் சொல்ல சொல்ல எழுதிக் கொண்டார்கள் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரிக்கும் பொழுது என் கணவர் உடனிந்தாரா என்றால் இல்லை, என் மகள் ரங்கிலா மட்டும் உடனிந்தார். போலீசார் நான் சொல்ல சொல்ல எழுதியதை என்னிடம் படித்து காட்டிதான் கையெழுத்து பெற்றார்களா என்றால் இல்லை படித்துக்காட்டவில்லை.

2. என்னிடம் எழுதப்பட்டிருந்த பேப்பரில் தான் கையெழுத்து வாங்கினார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் வீடுகள் நிறைந்த இடம் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் வசிக்கும் வீட்டில் உள்ளவர்களுக்கு சம்பவம் குறித்து விவரம் தெரியும் என்றால் சரிதான். பக்கத்து வீட்டில் உள்ளவர்கள் சம்பவத்தை விலக்கிவிட வரவில்லையா என்றால் இல்லை.

3. சம்பவத்தை விலக்கிவிட்டவரின் பெயர்,ஊர், முகவரி தெரியுமா என்றால் தெரியாது, அவர் ஆனந்தா கல்லூரியில் வேலை பார்க்கிறார். சம்பவத்திற்கு முன்பே என்னுடைய ஆடு எதிரியின் இடத்திற்குள் செல்வதாக எதிரியுடன் பிரச்சனை ஏற்பட்டு காவல்நிலையத்திற்குள் புகார் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

4. சம்பவம் நடந்தபிறகு போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நான் சம்பவம் தொடர்பாக ஆறாவயல் காவல்நிலையத்திற்கு சென்றேனா என்றால் ஆமாம். சம்பவம் நடந்த பிறகு ஆறாவயல் காவல்நிலையத்திற்கு எவ்வளவு நாட்கள் கழித்து சென்றேன் என்றால் 6,7 நாட்கள் கழித்து காவல் நிலையம் சென்றேன். காவல்நிலையத்திற்கு 6,7 நாட்கள் கழித்து சென்றபோது புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன் அவர்கள் வாங்கவில்லை.

5. போலீசார் புகாரை பெற்றுக்கொள்ளாதால் காவல்துணை கண்காணிப்பாளர் மற்றும் காவல் கண்காணிப்பாளர் ஆகியோரிடம் புகார் கொடுத்தேனா என்றால் ஆமாம். காவல்துணை கண்காணிப்பாளர் மற்றும் காவல்

கண்காணிப்பாளர் ஆகியோரிடம் புகார் கொடுத்தபிறகு தான் போலீசார் வழக்குப்பதிவு செய்தார்களா என்றால் இல்லை, முன்பே பதிவு செய்து விட்டார்கள். சம்பவ நடந்த பகுதியில் உள்ள வீடுகளில் கண்காணிப்பு கேமரா உள்ளது என்றால் இல்லை. நான் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் எதிரி அருள் மகன் ஸ்டீபனுடான முன்விரோதத்தின் காரணமாக பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.